IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.383/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 04.00PM.

பி.வா.சா. 1 சாட்சி ராவுத்தன் த.பெ.கொண்டப்பன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 21.01.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிராது விபரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் தெரு பாதையை அவருக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. தாவா சொத்து வாதிக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு சொத்து தெரு என்று எதிர்வாதம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சந்திற்கு வடக்கு பக்கம் எனது வீடு உள்ளது என்றால் மேற்படி பாதைக்கு வடக்கே எனது வீடு உள்ளது. மேற்படி சந்திற்கு தெற்கு பக்கம் வாதி வீடு உள்ளது என்றால் மேற்படி நடைபாதைக்கு தெற்கு பக்கம் வாதி வீடு உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் வரதராஜ் கவுண்டர் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கம் செல்வத்திற்கும் வாதிக்கும் உரிய நடைபாதை உள்ளது என்றால் சரிதான்.

3. தாவா சொத்தை கொண்டப்பன் என்பவர் யாரிடம் இருந்து எப்போது கிரையம் வாங்கினார் என்றால் சுப்புராம் மற்றொரு நபர் பெயர் தெரியவில்லை.

வாதி காலி இடமாக வாங்கினாரா, மொட்ட மச்சி வீடாக கிரையம் வாங்கினாரா என்று கிரைய பத்திரத்தை பார்த்தால்தான் தெரியும் என்றால் சரிதான். மேற்படி இடத்தை கிரையம் வாங்கிய பின்பு வாதி பின்புறம் உள்ள இடத்தை வாதியின் சொந்த சந்தாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. பொதுவானதாகும்.

4. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சந்து என்பதை மறைத்து பொது நடைபாதை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 04.08 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.21 10:32:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.